# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 134 JAFFNA, FRIDAY, 8TH NOVEMBER, 1974. No. 41


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## Christmas Presentation

To usher in the Yuletide Season in Jaffna, Uduvil Girls' College combines with the Jaffna Y.M.C.A. to put on the boards a Christmas Presentation at Veerasingham Hall, Jaffna, on Friday, the 15th and Saturday, the 16th instant. It is a novel presentation of the Christmas Theme in ballet and drama.

Uduvil's contribution to the Christmas programme is a ballet interpretation of the central message of Christmas. Of all the Gospel writings, St. John's presentation of the Incarnation is perhaps the most profound. "In the beginning was the Word. The Word was with God and the Word was God ......... The word became flesh and dwelt amoung us."

Every successive reading gives this message a deeper dimension. The event of Christmas is the focal point of the Christmas Faith. The wise men of Persia found the answer to their long, long quest in the form of a baby lying in a manger ; even so man's search to the eternal question of man's relationship to God ended in a stable at Bethlehem.

One can't imagine a better medium than our own expressive dance forms to portray a concept so tremendous in its implication. It's content is three fold: God's infinite compassion for man; man's obedience; and God's supreme sacrifice for man. This ballet is an attempt to weave these three aspects of the Christmas Theme into our own forms of dance and music.

The "*Business of Good Government*" by John Arden, to be staged by the Y. M. C. A., is a Christmas play with a novelty. It revolves around King Herod whose hopes, anxieties and fears are being put to the test. He believes that it is the business of good government to try and make good-will, great joy, and peace upon earth possible. As King of Judea he assumes that it is his responsibility to make these possible. The sudden appearance of three wise men from Persia looking for a child perturbs a complacent King who has had no recent issue. He conceals his ignorance and on the advice of his experts directs the wise men to look for the new claimant to the throne of Israel in Bethlehem. Having given this clue, he does not want to ignore the information which has been colated for him under conditions of the most exhaustive scholarship. Shepherds, Joseph and Mary, and the Hostess at the Inn appear on stage to complete the play. The Angel fills in the gap to carry the play forward. Mr. J. G Arasaratnam, a doyen of actors in the North, plays the role of King Herod. An enthusiastic group of actors have worked hard to produce this play under the direction of the Rev. Kingsley T. Muttiah. —Cor.

## Examination Success

● Dr. Christie W. Gunaratnam has been successful in the M.R.C.P. (Lond.) examination held recently, specialising in Cardiology. He is the eldest son of Mr. C. S. Gunaratnam, Retired Senior Assistant Commissioner of Labour, and Mrs. Varatha Gunaratnam, of Park Road, Colombo 5, and a grandson of the late Mr. K. S. Stephen, teacher, Jaffna College, Vaddukoddai, and the late Mrs. Stephen. He is an Old Boy of St. John's College, Jaffna.

● Miss J. Shanthini Navaratnam has passed the L. T. C. L. Pianoforte examination of the (Trinity College of Music, London) held in Madras on the 10th of October, 1974. She is the only daughter of Dr. J. S. Navaratnam and Mrs. Navaratnam, of Alexander Villa, Manipay.

## Inter School Debate

There was an interesting debate on Tuesday, the 29th of October, at Jaffna College Hall bet[illegible] S. C. M. of Chundikuli Girls' College and Jaffna College S. C. M. The Subject of the Debate was "*For the Christian Church, preaching the Gospel of God is more important than doing Social Service in the world.*" The proposition was led by Miss Mala Nadarajah of Chundikuli Girls' College. The Jaffna College team who held that "*Doing Social Service in this world is more important than preaching the Gospel of God*" was led by Mas. S. Pathmanathan.

At the end of the debate, Rev. S. N. Sugunananthan made a few comments on the subject and said that the debate was of a high standard.

Mas. Gajendran Rajendra, President of Jaffna College S. C. M., presided.

## To Canada for Training

Twelve engineers and technicians of the Ceylon Government Railway have left for Canada to undertake a six week comprehensive training programme for the repair and maintenance of diesel electric locomotives at the Montreal Locomotive Works, Montreal.

This programme in Canada is in preparation for the arrival in early 1975 of fourteen MLW locomotives which are being provided to the Government of Sri Lanka under the Canadian development assistance programme.

## Some Biblical Resources for Political Responsibility

**— A Basis for further study**

By the

REV. CELESTINE N. V. FERNANDO

*(Contd. from the issue of 1-11-74)*

As they consider these questions we ask all Christians to find out the implications for their personal and social life of the following Scriptures:

Gen. 1-3; Deu. 4, 5-9; 13-16; 23-24; Psalms 23; 84; 127 : 1-2; 145, 146; Isaiah 60 : 12; Amos; Matt. 5; 6; 7; Rom. 12; 15 : 1-2; 1 Cor. 13; 2 Cor. 3 : 1-6 and 4 : 5; 5 : 21 (J. B. Phillips); Rev. 21.

* * *

In accordance with the Gospel, St. Paul reminds us that "We are members one of another" (Eph. 4 : 25; 1 Cor. 12) not only in our humanity but also in our sin and in our common need of redemption by the Power of God which is greater than ourselves. Unless we gain the resources of such Power we fail — all of us. *Only by such power and in such a spirit* as He reveals in redemptive love shall we have the strength to accept the challenge of the Gospel for our nation's needs today as the greatest riches in all our nations are the People in them who, despite differences, belong to one family which can survive only as it lives in accordance with the human values of family life.

"Some malady is coming upon
us. We wait, we wait,
And the saints and martyrs wait,
for those who shall be martyrs
and saints.
Destiny waits in the hand of God,
shaping the still unshapen;
I have seen these things in a
shaft of sunlight.
Destiny waits in the hand of God,
not in the hands of statesmen
Who do, some well, some ill,
planning and guessing,
Having their aims which turn
in their hands in the pattern
of time."

* * *

"Temporal power, to build a
good world,
To keep order, as the world
knows order.
Those who put their faith in
worldly order
Not controlled by the order
of God,
In confident ignorance, but
arrest disorderly
Make it fast, breed fatal disease.
Degrade what they exalt."

* * *

"Is there not peace upon
earth, goodwill among men?
The peace of this world is
always uncertain, unless
men keep the peace of God."

*T. S. Eliot: Murder in the Cathedral, (Faber)* ●


UDUVIL GIRLS' COLLEGE & Y. M. C. A., JAFFNA

*presents*

**CHRISTMAS PRESENTATION**

**Christmas Ballet**
(Uduvil Girls' College)

**'Business of Good Government'**
(Y. M. C. A.)

Saturday, November 16, 1974
6-30 p. m.

VEERASINGHAM HALL, JAFFNA

*Ticket:*
First Class — Rs. 10-00
Second Class — Rs. 5-00

**JAFFNA COLLEGE**

Wanted

a fully qualified resident teacher for Mathematics and Physics in the G. C. E. (Advanced Level) classes.

Apply

before 25th November, 1974 on forms available in the College Office.

Vaddukoddai, PRINCIPAL
4th November, 1974.

**JAFFNA COLLEGE**

**ADMISSIONS — 1975**

Apply on forms available at the Office,
**for admission to Grades 1 to 6.**
Scholarships available at Grade 6.
Admission Examination on 23 - 11 - 1974.

Vaddukoddai. PRINCIPAL


**SERVICE OF THANKSGIVING**

A Service of Thanksgiving for the life and work of the **Late Dr. L. R. J. Watson** will be held at the Methodist Church, Mt. Lavinia, on Saturday, the 16th November, 1974 at 5 p. m.

**IN MEMORIAM**

IN EVER LOVING MEMORY OF

**DR. J. V. THAMBAR**

Born — 2-9-1886
Called to Rest — 7-11-1963

Ever present in the presence of his Lord and Master.

**Fondly remembered by his loved ones.**

175, Ward Place,
Colombo.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 134 ] 8 — 11 — 1974 [ இதழ் 41

# பெரும்பான்மையினர் சிறுபான்மைச் சமுகத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்

தெகியோவிற்றவில் நடைபெற்ற கேகாலை மாவட்ட தேசிய இளைஞர் சங்க மகாநாட்டில் பேசிய தே. இ. சங்க இயக்குநர் திரு. குமார் ரூபசிங்கா, "உலகில் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் மறைநது விட்டதாகக் கூறமுடியாது. ஆனால், அவற்றின் கொட்டம் அடங்கி வருவது உண்மையே. இந்நிலையில் இந்நாட்டில் தனியுடமை சாய்க்கப்பட்டு, தன்னிறைவை அடைய வேண்டுமானால் பெரும்பான்மைச் சமுகம் சிறுபான்மைச் சமுகத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டியது அவசியம்" எனக் கூறியதாகச் செய்தியுள்ளது. "தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக்கூடியவர்கள், சமத்துவ சமுக அமைப்பை விரும்புவோரைப் பெரிதளவு கொண்டுள்ள இளைஞர்களே" என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைவாழ் மக்களில் எழுபது வீதமானோர் 35 வயதுக் குட்பட்டவர்கள். இவர்கள் மனம்வைத்தால் இது முடியாததல்லவெனலாம். அதிலும் தேசிய இளைஞர் சங்கம் இன்று வலுவுள்ளது. அதன் இயக்குநர் செல்வாக்கு மிக்கவர். அவர் கருத்து விரைவில் செயற்பட்டு, தேசிய ஒற்றுமையும் சுபீட்சமும் இந்நாட்டில் பெருகும் என நம்பலாம்.

அரசியற்றலைவர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் தேசிய ஒற்றுமையின் அவசியத்தை முன்னரிலும் இன்று அதிகமாகக் கருத்திற் கொள்வது கண்கூடு. பிரதமரும் பிற மந்திரிகளும் தமிழர் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்துக் கொண்டுள்ளனர். விரைவில் செயற்படுவதே நன்மை தருவதாகும்.

வகுப்புவாதம் தென்னிலங்கையிற் செத்துவிட்டதெனக் கூறும் போது, தமிழினம் [illegible] தமிழினத்தைப் புறக்கணியோம் எனக்கூறும் வேளையில் தமிழினத்தின் கல்வி, தொழில வாய்ப்புகள் பாதிக்கப்படுவதும் சொல்லுக்கும் செயலுக்கும் இசைவில்லையென்று காட்டும்! ஆயின் திரு. குமார் ரூபசிங்கா இளைஞர். நாட்டு நலனில் அக்கறையுள்ளவர். அவர் வாக்குத் தவறாதென நம்பலாம்.

பெரும்பான்மையர் இந்நாட்டில் தம் மொழி, மத, வசதி உரிமைகளோடு வாழ விரும்புவரோ அந்த ஆசை சிறுபான்மையருக்கும் இருப்பது விநதையலல. அதைக் கேட்பதும் விரும்புவதும் இனவாதம் எனக் கூறலும் பொருந்தாது. சிறுபான்மையர் விஷயத்தில பெரும்பான்மையர் விட்டுக்கொடுக்க முடியாதபடி செய்யப்பட்டதாலேயே இன்று இந்நாட்டு மக்களிடையே இனபேத உணர்வும் இன்னலும் பெருகியுள்ளன. சிறுபான்மையரை அடக்கி வைக்கும் இயல்பாலேயே இன்று சிறுபான்மை இளைஞர் சமுதாயம் இன்னறபடுகிறது, இம்சையடைகிறது.

இப்பொழுது யாழ்ப்பாணம் வந்திருக்கும் தோம்பே தொகுதி இளைஞர் தமிழர் பிரச்சனைகளையும் இசைந்துவாழ விரும்பும் இயலபையுங கணடுள்ளனர். இவர்கள் குறை தீர்க்கபபடவேணடுமென்ற எணணமுங் கொணடுளளனர். இந் நன்முயறசிக்கு இவர்கள் உறைமோராவர் என நமபுகிறோம்.

அரசியலவாதிகளின் அரசியற் பகடையாய் இந்நாட்டு மொழிகளும் மதங்களும உருளத தலைபபட்டதால வநத கேட்டை இந்நிலையின அனைகா உணரத தொடஙகிவிட்டனர். தெயகிலுளளோர் மொழி, மதம, இனமபறறுப் பேசுவதெலலாம தேசியம எனறும், வட, கிழககிலுளளவாகள பேசுனால அது வகுப்புவாதமெனறும பாராடடபபடடு, சிறுபானமையினட உரிமையிழநத நிலைககுத தளளபபடடிருப்பதன கேடே இநநிலையெனறாலும தவறாகாது.

கடந்தவைகளைப் பேசிப் பயனில்லை. வேண்டியவைகளைக் கவனிப்பதே மேல. திரு. ரூபசிங்கா தலைமைதாஙகும இயக்கததின ஏடான 'ஜனவேகம்' சிறையில வைககபபடடிருக்கும தமிழ் இளைஞர் பறறிக் குரல் எழுப்பியதும, பிரதமர் அவர்கள் பறறிவரைவில முடிவெடுக்குமபடி உரியர்களைப் பணித்திருபபதும கவனிப்புக்குரியன. தேசிய அடிப்படையில இயங்கும தேசிய இளைஞா சஙகம யாவையும தேசிய நோக்கில அணுகும, தீர்வுகாணுய; அதனால கேடுகள தீரும; விடிவுணடாகும என எதிாபாாககலாம். இன அடிப்படையில கருமங்கள் நடக்கும்போதே பிரச்சனைகள பெருகும். நாட்டு முன்னேறறமோ அந்நியோன்யமோ குனறும். இந்த எணணம பெருகி வலுவடையும் இந்நேரத்தில், திரு. ரூபசிஙகாவின குறிப்பு பலரின் கவனததைப் பெறும். பயன ஏறபடும் என எதிர்பார்ககிறோம். இலங்கை ஒரு உண்மையான—இந்நாட்டு மக்கள் எவரும் ஏற்றுக்கொள்ளும—சோஷலிச நாடாய் விளங்கி முன்னேற அவர் கூற்று வழிநடத்தும்; அதற்கான முயற்சிகள் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்.

## வேதநாயக சாஸ்திரியார் வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்

— எஸ் ஜெபநேசன் —

தென்இந்தியாவிலுள்ள திருநெல்வேலியில் இவர் ஒரு தமிழ்ப் பாடசாலையிற் கற்று வந்தார். வயதோ பத்துக்கூட ஆகவில்லை. ஒருநாள் அந்தப் பாடசாலைப் பிள்ளைகளோடே வெள்ளத்தில் அழிந்துபோன வெள்ளரித் தோட்டத்திற்குச் சென்று தண்ணீருக்குள் காய்களைத் தடவித் தடவிப் பறித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது வெள்ளத்திற்குக் கீழேயிருந்த கிணற்றுக்குள் விழுந்து அமிழ்ந்திப் போனார். இவருடன் கூடிச் சென்ற பையன்களெல்லாம் பயந்து ஓடிவிட்டார்கள். இவரோ இரண்டுதரம் கிணற்றிலே அமிழ்ந்து, மூன்றாம் முறை எழும் பினபோது தேவ கிருபையினால் வரம்பைப் பிடித்துக்கொண்டு தப்பிப் பிழைத்தார். தகப்பனார் இதனைக் கேள்வியுற்று ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்.

* * *

பத்து வயது நிரம்பிய வேதநாயக சாஸ்திரியாரைத் தஞ்சாவூர் சுவாட்ஸ் ஐயர் தம்முடனே கூட அழைத்துச் சென்று, தம் வீட்டில் வைததுப் படிப்பித்து வந்தார். அக்காலத்தில் சில வேளை வேதநாயகர் சுவாட்ஸ் ஐயருக்குக் கால் பிடித்துக் கொண்டிருப்பார். ஒரு நாள் கால் பிடித்துக் கொண்டிருக்கும்பொழுது, சுவாட்ஸ் ஐயர் பரமண்டலத்தின் மகிமையையும், அங்கு வாழப் போகிறவர்களின் பெருவாழ்வையும் எடுத்துரைத்தார். அப்பொழுது வேதநாயகர், "ஐயா, நான் உங்களோடே கூடப் பரமண்டலத்துக்கு வந்து, அங்கே எப்போதும் [illegible] த்துக் கொண்டிருகக விரும்புகிறேன்" என்றார். சுவாட்ஸ் ஐயர் அதற்கு "அப்பா! பரமண்டலததில் கால வலிக்குமா? அங்கே பெலவீனமாகிலும் விசனமாகிலும் ஒன்றுமிராது. பரமண்டலததைப் பற்றி நீ அறியவேண்டியவை அனேகம் இருககிறதே!" என்று கூறி அவர் அறியாமையை அகற்றினார்.

* * *

1811-ம் வருடம் இவர் யாழ்ப்பாணததிறகுத தம பாடகர் கூட்டததுடன புறப்பட்டுச் சென்றார். தஞ்சாவூரிலிருந்து நாகபட்டினம் சென்று, அங்கு கப்பலேறிக் காங்கேசனதுறைக்கு வரவேண்டியதாயிருநதது. அப்பொழுது நாகபட்டினததில வடகாறறு அடிததாமறால இலஙகைககு வரமுடியும. நாகபட்டினததில ஒரு வாரந் தஙகின பினனும வடகாற்று அடிககவில்லை. அவரிடம இருநத பணம் எலலாம செலவாகிவிட்டது. கப்பலோட்டுபவனிடம காறறு எபபோ அடிக்குமெனக் கேடக அவன், மாரியமமனுககுக கோழி வெட்டிப பூசை பணணினால அது சொலலும என்றான். அப்பொழுது வேதநாயகர், உனது மாரியமமனுககுக கோழி வெட்ட வேணடுமெனறாய், எனது இயேசு அப்பன செதது விட்டாரோ என்று கேட்டார். பின்னர் இவர் தமது இயேசு நாயகன் பேரிலே ஒரு பாடலுடனுணடுபணணி வடபககததை நோககிப பாடினார்.

"சடகாத் திரத்துயரால் மெலிந்தே
தமியேனுமங்
கடகாத் திரைக்கடல் யாட்பாணமேறிக்
கடக்கவென்றால
நடகாத் துற்பான்மையி னுலோர்
கிழமை நலிந்துநின்றேம்
வடகாத் தருள்தீயேசா என்பங்கில்
வளர்ந்தவனே."

என்பது அந்தப் பாட்டு. இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்போதே காற்றடித்தது. அப்பொழுது கப்பலோட்டுபவன் இவரைத் துரிதப்படுத்தித் தோணியேற்றி அக்கரைப்படுத்தினான்.

* * *

இவர் யாழ்ப்பாணத்தில், சுண்டிக்குழியில தங்கியிருந்தார். அந்த ஊர் வண்ணானிடத்தில் இவரும் இவரோடே கூடப் போனவர்களும தங்கள் உ[illegible]களை [illegible] திருடன் வண்ணான் வீட்டிலே வந்து எல்லா உடைகளையும் திருடிக்கொண்டு போய்விட்டான். வண்ணான் வந்து இச்சம்பவத்தை வேதநாயக சாஸ்திரியாரிடம் கூறியபொழுது, அவரது சுற்றத்தாரும், பாடகரும் மிகவும் பரிதபித்தார்கள். வேதநாயகர் தம்மை அழைதத சீயோன்மலை இரட்சகரை நோக்கி விணணப்பம பணணினார். என்னுடைய வஸ்திரஙகளெலலாம் களவு போயவிட்டன, நான் இப்பொழுது வெளியே புறப்பட முடியாமலிருக்கிறேன். என்னோடே வந்தவாகளுககும் எனக்கும் இப்பொழுது வஸ்திரங் கொடுத்து, நாஙகள சந்தோஷத்தோடே வெளியே போகக கிருபை செய்ய வேணடுமெனறு, பிரார்த்தனை பாடி செபம் பண்ணின பின்பு, இரண்டொரு கீதங்களைப் பாடிக் கொணடிருந்தார்.

"நெஞ்சே நீ கலங்காதே சீயோன்மலை
ரட்சகனை மறவாதே — என்ன
செய்வேனென்று"

என்ற பாடலும் அந்தச் சூழ்நிலையிற்றான இயற்றப்பட்டுப் பாடப்பட்டது.

அப்பொழுது அந்த வழியாற் சென்ற இராமசாமி என்ற இந்து மதப் புகையிலை வியாபாரி வீட்டிறகு உள்ளே வந்து பாடலைக் கேடகலாமோ என்று கேட்டார். வேதநாயக சாஸ்திரியார் சந்தோஷமாக வரலாமென்றார். அந்த மனிதனை இவர் முன்னொரு பொழுதுங் கண்டதில்லை. இராமசாமி சற்று நேரம் பாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பின்பு, நீங்கள எலலாரும் துக்கமாயிருக்கிற காரணம் என்ன என்று விசாரித்தார். வேதநாயக சாஸ்திரியார் உடைகள் களவு

( தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## பொன்மொழிகள் சில

தொல்லைகள் நிறைந்த இவ்வுலகில் சரியானபடி வழிநடத்தப்பட்ட மக்களைப் போதியளவு உண்டுபண்ண முடியுமானால், வழிப்படுத்திச் செலுத்தும் ஏவுகணைகளுக்கு அவசியமேயில்லை.

— ஜென. டேவிட் ஷூப்.

காற்றுடி காற்றோடல்ல, காற்றுக் கெதிராகவே உயரப் பறக்கிறது

— வின்ஸ்ரன் சேர்ச்சில்.

உன்னைக் கையாள உன் தலையையும், மற்றவர்களைக் கையாள உன் இதயத்தையும் உபயோகி.

— ஆங்கில மஞ்சரி.

வாழ்க்கையின் ஓர் இலக்கே தேடற்கரிய திரவியம்.

— R. L. ஸ்ரீவின்சன்.

மனித இயல்புடன் வாழப் பாதுகாப்பளிககும் ஓர் உலகமே நமக்கு வேணடும்.

— கோல்ட்பேர்க்.

கிடைக்குங் காலத்தை எப்படிப் பயன்படுத்துவதெனத் தெரிந்தால், அது மிக நல்ல காலமாகும்.

— எமேர்ஸன்.

## இல்லை, இல்லை.

இளைத்தநேரம் சிறிது தேநீர் அருந்தச் சீனி இல்லை, பசித்த குழந்தைக்குப் பால் கிடைக்கவில்லை. புசிப்பதற்குப் போதிய உணவில்லை என்பவர்களது எண்ணிக்கை அதிகரிக்கிறது நாட்டிலே. அதுவும் நன்மைதானென்று சொல்வாரும் இல்லாமலில்லை. புதிய புதிய முயற்சிகள், வழிவகைகள் கையாளப்பட வழி திறக்கப்பட்டுள்ளது. தொழில் வளமும் உற்பத்தி வேலைகளும் பெருகுகின்றனவல்லவா!

அன்பில்லை, இரக்கமில்லை, அதனால் மழையுமில்லை; விளைவுமில்லை என்பாரையுங் காண்கிறோம். பதுக்கலும் விலையுயர்வும் இப்படிக் கூறவைக்கின்றன. நெல் புசலொன்று எழுபத்தைந்து ரூபாவுக்கு மேலாக நூறு ரூபா வரையில் விற்பவர்கள் இரக்கமுள்ளவர்களா எனக் கேட்போர் நியாயமற்றவராகார். தட்டுப்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ளைலாபமடிப்பவர் அன்பிலார்தானே. கொடுமை மலிந்தால் வானம் பொய்யாதென்செய்யும்? கொடும்பாவி கட்டி அழுதும் பார்க்கிறவர்கள் இல்லாமலில்லை.

உண்மையில்லை, நீதி இல்லை, நேர்மையில்லை, ஒழுக்கமில்லை என்பாரும் உண்டு. உறவிலே, பேச்சிலே, செயலிலே இவை காணப்படவில்லை. சொல்வதைச் செய்வதில்லை; செய்வதில் நேர்மையில்லை. எங்கும் எதிலும் இதை எடுத்துக்காட்ட முற்படுவார் இல்லாமல் இல்லை;

ஒற்றுமையில்லை, உய்யும் வழி இல்லை, உயர மார்க்கமில்லை எனபவர்கள் ஒரு பக்கம். சுயநயம் இல்லாத மக்கள் நலங்கருதும் தொண்டரில்லை என்பவர்கள் ஒரு பக்கம். பிறர் துயர் கருதும் பெருங்குணத்தாரில்லை என்பவர் ஒருபக்கம்;

இவை இல்லாதவிடத்து ஏற்படும் இடர்களைக் கண்டும் இறைவனிடதது அன்பு இல்லை, பக்தி இல்லைப் பயமில்லை, அதனால் பயங்கரச் செயல்களுக்குக் குறைவில்லை. நாளேடுகளில் இத்தகைய செய்திகளுக்குக் குறைவில்லை.

இத்துயர் நீங்கி. இன்புற்று வாழ வழியில்லை என்று மாத்திரம் சொலல முடியவிலலை, கடவுள் பயமும, அவன பணியில் ஆர்வமும் பிறக்கும்போது மனிதன் மாறுகிறான். கடவுளிடம் அன்பு செலுத்த அவர் அனபின் பெருகை உணர்ந்து பதில் செய்ய முற்படும்பாது மக்களிடததனபு தானாய்ப் பிறக்கிறது. மக்கள் சேவை மகேசுரன சேவையாகிறது. இல்லாமை நீங்குகிறது, இன்பம் பிறக்கிறது, உலகமே இறைவனிருப்பிடமாய்க் காட்சி தருகிறது. பேரின்ப வாழ்வு இங்கு இப்பொழுதே கிட்டுகிறது; எச்சமயததோரும் கூறும் பரிகாரம் அனுபவமாகி இல்லாமை நீங்கி எல்லாம் உடைமையாகிறது;

இறையன்றிக் குறை தீர்க்கவல்லார் யார்? அவன் நெறியன்றி இன்ப வாழ்வுக்கு வழியேது? தேடக், காணக், கடைபபிடிகக முயற்சிப்பார் இல்லையா?

## கூப்பன் கடைகளில்

கூப்பன் கடைகளில் பொருட்களை விரைவில் (10 நிமிடத்தில்) விநியோகித்து நீண்ட கியூவரிசையைக் குறைக்கத் திட்டம வகுக்கப்படுகிறது. மேலும், பல விற்பனவு நிலையங்கள் திறக்கப்படவுமுள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரியும் யாழ். கிறித்த வாலிபர் கழகமும் இணைந்து அளிக்கும்

## நத்தார் பண்டிகை விருந்து

காலம்: 16, கார்த்திகை, 1974 (சனிக்கிழமை) பிற்பகல் 6-30 மணி.

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

**நிகழ்ச்சிகள்:**

**நல்ல அரசாங்கத்தின் கடமை**

நாடகம்: யாழ். கிறித்த வாலிபர் கழகம்.

* * *

நத்தார் செய்தியைக் கொடுக்கும் நாட்டிய நாடகம்

உடுவில் மகளிர் கல்லூரி

அனுமதி:

முதலாம் வகுப்பு: ரூ. 10/-

இரண்டாம் வகுப்பு: ரூ. 5/-

மாணவர்:

15-11-74 வெள்ளிக்கிழமை பிற்பகல் 6-30 மணி

அனுமதி: ரூ. 1/-

## வேதநாயக சாஸ்திரியார் வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்

போன செய்தியைக் கூறினார். இராமசாமி உடனே தன்னிடத்திலிருந்த ஒரு மனிதனை அனுப்பி, இரண்டு சேலை வாங்கிவரச் சொல்லி, பட்டுச் சேலையை உங்கள் மனைவிக்கும், மற்றச் சேலையை உங்கள் வேலைக்காரிக்கும கொடுங்கள் என்று கொடுத்து, தன் பையிலிருந்து ஐம்பது இரையால் அடங்கிய ஒரு Bank Note எடுததுக் கொடுத்தார். நீங்கள் உஙகளுக்கு விருப்பமான வஸ்திரங்களையெல்லாம் இப்பணத்துடன் வாங்கலாம் என்று சொல்லிப் போனார்.

* * *

வேதநாயக சாஸ்திரியார் தஞ்சையை ஆண்ட சரபோஜி மகாராஜாவின் நெருங்கிய நண்பர். சரபோஜி மன்னர் அவரைத் தமது ஆஸ்தான கவிஞராக வைத்துப் பெருமைப்பட்டார். ஒரு முறை நோவாவின் கப்பற் பாட்டு என்று ஒரு பிரபந்தததை இயற்றி, இராஜ சபையில் அரங்கேற்றினார். மகாராஜா அதற்கு நூறு வராகன பொன வெகுமதியாகக் கொடுத்தார். பின்னர் மகாராஜா "நீர் சம்பளம் வாங்குகிறீர் கவனமாயிரும்; ஒருவரையும உமது மார்க்கததில இழுத்துக் கொளளாதேயும" என்றார். அதற்கு வேதநாயக சாஸ்திரியார், "நான ஞானஸ்நானம் கொடுக்கிறவனல்ல. அதறகாகக் குருககள இருக்கின்றனர். நான் புத்தி மாத்திரஞ் சொலலுவேன" என்றார். ஆனால், மகாராசாவின் வாாத்தைகள இவருக்கு வெகு சஞ்சலத்தை உணடாக்கிற்று. அபபொழுது கணணீர் விட்டு. "கடவுள எனக்குப் பாடுகிற வரத்தையுங் கொடுத்து இத்தூரம மனுஷனுக்கிவிட்டார். இப்போதும நானிந்த அற்பப் பொருளுக்காக அவரைப் பாடாமலும் பரசங்கியாமலும பூமியிலிருந்து என்ன பயன்? இனறு இரவு என்னைப் பாம்பு கடித்து நான் செத்தால், மகாராசாவின் பணம் எனககென்னத்துக்குதவும்" என்று மனத்திலே எணணி மகாராசா கொடுத்த பணத்தை மறுபடியும் அவரிடத்தில் கொடுத்துவிடக் கொண்டு போனார். அத்தருணத்தில் மகாராசா உள்ளே அரண்மனைக்குள் போய்விட்டார். அங்கே அவருடைய மந்திரியாவாய் பண்டிதர் மாத்திரமிருந்தார். அவர் இவருடைய மார்க்க வைராக்கியத்தைக் கணடு, உம்முடைய சுவாமியை நீர் பிரசங்கிக்க வேண்டாமென்று மகாராசா சொல்லவில்லை. ஒருவரையும் இழுக்காதேயுமென்று மாத்திரஞ் சொன்னார். நீர் சந்தோஷமாக உம்முடைய சுவாமியைப் பிரசங்கித்துக் கொண்டிரும். அதற்குத் தடையில்லையென்று சொன்னார். பின்னர் பணததை ஒரு மாணுக்கனிடத்தில் கொடுத்துச் சாஸ்திரியார் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்;

## புதினக் குறிப்புகள்

இவ்வாண்டுக்கான இலங்கை-இந்திய கப்பற் சேவை கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது. ஜனவரி மாதம் 2-ந் திகதி அது திரும்ப ஆரம்பமாகும்.

* * *

பனைகள் தறிப்புத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல் நடத்துமாறு அகில இலங்கை காந்திய சேவா சங்கம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மூலம் அரசைக் கேட்டுள்ளது. கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை வெல்லம், கற்கண்டு, சீனி செய்துவர அரசாங்கம் மானயம் வழங்கி ஊக்குவிக்க வேண்டுமென்றும், பாடசாலைகளில் பனந்தொழில் ஒரு கைத்தொழிற் பாடமாகப்பட வேண்டுமென்றும் அது கேட்டுள்ளது.

* * *

மன்னாரில் நிறுவப்பட்டுவரும் படகு திருத்தும் தொழிற்சாலை இம்மாத இறுதியில் இயங்கத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது;

* * *

பண்டத்தரிப்பிலிருந்து உடுவிலுக்கு மாற்றலாகிச் சென்ற அருள்திரு. S. T. ஆசீர்வாதம் அவர்களுக்குப், பிரியாவிடையும் நவாலியிலிருந்து பண்டத்தரிப்புக்கு மாற்றலாகிச் சென்ற அருள்திரு. S. N. சுகுணனந்தனுக்கு வரவேற்பு உபசரணையும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பண்டத்தரிப்பில் ஆசிரியர் திரு. கே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது;

* * *

கடந்த சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கிறிஸ்து சேவா ஆச்சிரமத்தில் சமய சமூக கற்கை நிலையத்தாரால் நடத்தப்பட்ட வேதநாயக சாஸ்திரியாரின் இருநூறும் ஆண்டு நினைவு விழா நடத்தப்பட்டது. முன்னாள் யாழ்ப்பாண அத்தியட்சர் அருள்பெருந்திரு ச. குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். ஜெபநேசன் சாஸ்திரியாரின் வாழ்க்கைக் குறிப்பு, அவர் இயற்றிய நூல்களிற் காணப்பட்ட கவியின்பம், பக்திப் பரவசம், வேத விசுவாசம் ஆகியவைகள் பற்றி உரையாற்றினர். அத்தியட்சரும் உரையாற்றினர், தொடக்கத்தில் திரு. ஆனந்தநாயகம் குழுவினர் சாஸ்திரியாரின் பாடல்கள் சிலவற்றை இசைத்தனர். திரு. ஜெபநேசன் குறிபபிட்ட பாடலகளும அவர்களால் இசைக்கப்பட்டன,

## சிறையில் இருக்கும் 42 தமிழ் இளைஞர்கள்

சிறையில் இருக்கும் 42 தமிழ் இளைஞர்கள் பற்றிப் பிரதமர் அக்கறை செலுத்துவதாயும், அவர்கள் சமபந்தமாக உடனே இறுதி முடிவு எடுக்குமாறு அட்டேர்ணி ஜெனரலைப் பணித்துள்ளதாகவுந் தெரிகிறது.

## இப்படிச் சொன்னார்கள்

### விதி

விதியை நம்புவது பிழை. ஐரோப்பியர் விதியை நம்புவதில்லை. ஆசியாவிலுள்ள மகமதிய சாதியாரும், இந்துக்களுந்தான் விதியை மும்முரமாக நம்புகிறார்கள். ஐரோப்பியர் நாகரிகத்திலும், செல்வத்திலும் ஓங்கி வருகிறார்கள், முயற்சி செய்பவன் நல்ல ஸ்திதிக்கு வருவான், விதியை நம்பினவன் சோற்றுக் இல்லாமல் பட்டினி கிடப்பான்.

— பாரதியார்.

### அறிவு

பறவைகளைப் பார்த்துப் பொறாமைப்படத் தேவையில்லை. நாம் பறக்கக் கற்றிருந்தால், இங்கும் அங்கும் பறந்து திரிந்து அலைவோம். இப்போது ஒரு மூலையில் இருந்தபடியே அறிவைக் கொண்டு இங்கும் அங்குஞ் சென்று உலகத்தையே அளந்து பார்க்கிறோம். இறக்கைகளைவிட இந்த அறிவுதான் சிறந்தது.

— மு. வ.

### செவிடு, குருடு

எப்போதும் தம்மைப் பற்றியே சிந்திக்கின்றவர்கள், அறுபது நாழிகையும் தம்மைத்தாமே வழிபடுவதில் ஈடுபட்டிருப்பவர்கள், அல்லும் பகலும் தமது பார்வையைக்கொண்டே உலகமனைத்தையும் பார்ப்பவர்கள், அவ்வளவேன், தம்மைத் தவிர உலகமே வேறு கிடையாதென்று நினைப்பவர்கள் பிறருடைய உள்ளத்தை வசப்படுத்தும் வழியை ஒருபோதும் அறியமாட்டார்கள். செவிடனுக்குப் பாட்டினினிமை தெரியாது குருடன் இயற்கை எழிலில் ஈடுபடமுடியாது. அப்படித்தான் இதுவும். தமது வழிபாட்டிலே மூழ்கியிருப்பவர்கள், தம்மை அறியாமலே மனத்தினால் குருடர்களாகவும், உள்ளத்தினால் செவிடர்களாகவும் இருக்கிறார்கள்.

— வி. ஸ. காண்டேகர்.

## புத்தூரில் முன்னேற்றம்

இலங்கை மெதடிஸ்த திருஅவைக்கு புத்தூரிலிருக்கும் காணிகளும், கட்டிடங்களும் சமூக நிறுவனமாக மாற்றி அமைக்கப்படவிருக்கின்றன. மருத்துவமனை இயக்குநர் அவை அண்மையிலே கூடியபோது இத் தீர்மானத்தை எடுத்துள்ளது. புத்தூர் நிறுவனம் துவக்கத்திலே பெண் திருத்தொண்டர்களைப்பயிற்றவும், கிராமத்துக்கு மருத்துவப் பணியளிக்கவும், நற்செய்தித் திருப்பணியில் ஈடுபடவும் அமைக்கப்பட்டது. தற்போதைய சமூக நிலைக்கு ஒத்துவர இந்நிறுவனத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள கட்டிடங்கள் புதிய பாவிப்புக்கு உபயோகிக்கப்படும். முதிர்வயதான குடிமக்கள் இருப்பதற்கான வசதிகள் உண்டு. சிறுவர் பாடசாலையும் தொடங்கப்படவிருக்கிறது. இப் பாடசாலையை பயிற்றப்பட்ட உபாத்தியாயர் நடத்துவார். புத்தூர் நிறுவனத்தின் முக்கிய பகுதியாகிய மருத்துவ வேலை தொடர்ந்தும் செய்யப்படும். தொழிற் பயிற்சியும் உணவுஉற்பத்தியும்செய்யத்திட்டமிடப்படுகிறது;

ஆவணியில் மெதடிஸ்த திருப்பேரவை கொழும்பில் கூடிய போது, இம்மாற்றங்களைச் செய்ய யாழ்ப்பாண வட்டகத்துக்குப் பொறுப்பைக் கொடுத்து, கனம் கிங்சிலி முத்தையா போதகரை இதற்குப் பொறுப்பாக நியமித்தனர். விரைவில் இதைப்பற்றிய வேறு அறிவித்தல்கள் தரப்படும். இவற்றைப்பற்றி அறிய விரும்புகிறவர்கள் கனம் கிங்சிலி முத்தையா போதகருடன் தொடர்பு கொள்ளவும்;

**The Morning Star**

**8th November, 1974**

## Churches Asked to Pray for World Food Conference

Member churches of the World Council of Churches have been asked to make "informed intercession" for the World Food Conference which has been called by the UN and which is meeting now in Rome.

In a letter to 271 Protestant, Orthodox and Anglican churches in 90 countries Dr. Philip A. Potter, the WCC's General Secretary, urged the churches to pray particularly for all the efforts being made to create a more just world order. While the World Council's ability to influence the conference was limited, he said, it will be able to make its concerns known.

Four particular concerns of the churches were highlighted by the West Indian churchman. First, "the right to adequate food is a basic human right". Secondly, the problem of food supplies and distribution must be tackled from the view-point of the oppressed and the poor. This meant working for a new international economic order, a commitment to the international control of food reserve stocks and multilateral channeling of food aid.

Dr. Potter asked the churches to press these considerations with their governmental representatives at the World Food Conference. "There is real doubt whether the conference will succeed in getting agreement to the action that is necessary", he said.

Noting that the hardest-hit are the poorest countries, the WCC General Secretary underlined that many of them are totally dependent this year on food aid from the wealthy countries. Bad weather and disastrous harvests, steep rises in oil prices and a shortage of fertilizer had all contributed to the crisis, Dr. Potter said. The only way out for many of the poorest people is death, he forecast.

Representatives from the WCC will be present at the Rome conference, led by Dr. Potter. A special study on the food crisis commissioned by the WCC's Commission on Inter-Church Aid, Refugee and World Service is being circulated to the churches. It makes specific suggestions for church action.

*EPS*

## Letter from America

*October 23, 1974, 26 Valley Rd., Milton, Mass — 02187.*

Dear friends,

It's chilly these days, frost on the ground, and children bundled up in snow-suits.

This is Sunday. Yesterday at 7 p. m. we had a visit from the Mahendrans and the Arulanan-thams. Dr. K. Arulanantham, his doctor wife and 2 little boys are now at Yale Medical School, where he is doing post-doctoral work in Pediatric Endrocrinology. Dr. Mahendran is at a hospital in Providence, R. I. They have also 2 little boys. We do appreciate our Jaffna friends making the effort to call on us.

All goes well with the Rev. S. S. Aruiampalam. He is happy that his advisor is Dr. Lee Rouner. His hostel has 2 stoves, 4 refrigerators, and complete kitchen equipment; so he does his own cooking, shoping in a nearby supermarket. His 36 year old Cuban room-mate was recently married to an American girl. He has a church in N. H. and his wife stays in the parsonage. He leaves on Fridays and returns on Tuesdays. He is in his 2nd year, and is planning on involvement in the Spanish Church.

My arm is much better, but the stubborn blood pressure stays up, so I take pills and don't go out much.

I judge you all know that the three officers of the Jaffna College Board of Trustees are coming to Ceylon in the first week of December. Ed is President ... I decided to go to Madras, to Michael's home, but not to Jaffna. It's not that I don't love you, but that I love you so much that I don't think I could stand the emotional and physical strain. As now planned, we will fly direct to Madras from Boston November 24. This means we will be in Tambaram for Ed's 73rd birthday, November 27th, and for Thanksgiving, November 28th. Then soon the Merrick Lockwoods will join us for Christmas. They must return to Bangladesh for a Quarterly Meeting on Dec. 30; and we will follow January 5th for a 2-week visit. You can imagine that we are very excited.

Shalom

**Dorothy Lockwood**

---

The 27th Annual Festival
of
**CAROL SINGING**
by
**THE YOUTH**
of the
**NORTH**
at the
**Veerasingham Hall, Jaffna**
on
Saturday, 23rd November, 1974
at 6-00 p. m.
All are welcome.
*Admission by programme.*

---

**The Methodist Church**
**PUTTUR CENTRE**

Under the direction of a Resident Warden the Centre serves the community in the following ways:

**Nursery School** with a Trained Teacher holding a diploma in pre-school education in Charge. Fees: Rs. 10/- per month.

**Further Studies:** Classes in Mathematics, English, Music, Dancing. Further information on request.

**Senior Citizens' Accommodation** with all conveniences.

Furnished Rooms:
Single Rs. 25/- per month
Double Rs. 40/- per month
Unfurnished Rooms:
Single Rs. 20/- per month
Double Rs. 30/- per month

**Medical Service** at Arokya Vasam Hospital. Reasonable charges.

*Enquiries welcomed by:*
REV. KINGSLEY T. MUTTIAH, B.D.
The Bungalow,
Puttur Centre,
Puttur.

---

## OBITUARY

The death occurred on Saturday, the 26th October, of Mrs. Stella Kanmany Chelliah, relict of the late Dr. C. T. Chelliah, of the Green Memorial Hospital, Manipay, at her residence, No. 26/3, Station Road, Nugegoda. The burial took place the following day, Sunday afternoon, at the Kanatte Cemetery. She was a devoted wife and mother and led an exemplary Christian life. She was uniformly helpful to relatives, friends and the poor. She leaves behind her only son, Mr. Vijendran Chelliah (of the Ceylon Electricity Board) his wife and two little grandsons, her two brothers (Messrs. R. E. Ponniah, retired Deputy Director of Agriculture and W.T. Ponniah, Secretary of the All Ceylon Pensioners' Association); three sisters (Mrs. V. S. Ratnam, Mrs. R. C. Winslow and Mrs. D. Robert); Mrs. G. M. Kanagaratnam and Mrs. D. R. Gunasegaram (sisters-in-law); and a host of relatives and friends to bemoan her loss.

---

## The United Nations

By E. P. RASIAH, J. P.

Realising the wisdom of that timeless message "Peace on earth and good-will towards men" nations have laboured for a world peace; yet, the dove of peace has eluded their grasp and, time and again, plunged them into the depths of war, blood-shed and destruction. *The New York Times* once stated that, in 2361 years of history, there has been 2134 years of war and only 227 years of peace. In other words for every year of peace enjoyed by the people, they have had to spend nearly 15 years at war. How unfortunate? To remedy this, various methods have been tried to find out an international process to prevent wars and settle disputes between countries — military alliances, balance of power and then the League of Nations had all, in turn, failed. In 1920, 54 Nations decided solemnly not to resort to war to settle disputes.

Despite it, in 1931, Japan moved into Manchuria and in 1935, Italy attacked Ethiopia. Germany, that had covenanted with France, Belgium, Poland and Czechoslovakia that they would, "in no case attack or invade each other or resort to war against each other," moved into Czechoslovakia. Russia, after signing a non-agression pact with Finland, Latvia, Estonia and Luthania, annexed these countries. Hitler-Stalin pact of 1939 was broken two years after it was drawn up, and so the record went on. Man's efforts at peace-making have been a long string of failures.

The fact that the survival of civilisation rested on the prevalence of world peace began to dawn on our leaders, when they emerged from the turmoils of the second world war. Eisenhower warned the world, "that civilisation itself in the face of another catastrophe, such as the one we have faced ... would tremble, possibly decay and be destroyed." Bishop Fulton of Sheen had written, "Those who put too much trust in words alone, should keep in mind that 450 treaties of peace were signed under the auspices of the League of Nations, between the first and the second world war ... yet these were all broken by one or the other of the contracting parties."

Consequent to these failures, the need of a stable, permanent world Organisation for the preservation of peace among all nations was felt by all. Accordingly the victorious nations met on 33-10-43 and the U. N. O. was born. It is today a cemplex Organisation and, like the human body, has many organs with specific functions to perform. Of these, "The Security Council" is the principal Organ charged with the responsibility of maintaining international peace and Security. Whatever its differences and short-comings, the U. N. was the best -- indeed the only Organisation available for humanity — to champion the cause of world-peace. According to John F. Kennedy, "The U. N. is expected to function as a harmonious whole for the good of mankind; but, in practice, it is torn by dissension which seriously hampers it in fulfilling its primary function — the maintenance of world peace. It hns been repeatedly by-passed by many in favour of force."

Well over 100 times, the major powers have stifled the U. N's capacity to act, by using the veto. Russia had used it for nearly 100 times as against seven by other powers, during the same period. There have been several occasions on which the U. N. has been compelled to veer from its chartered course. According to the London *Observer*, "The U. N. can only be what its member countries choose to make it. At present it is weak, inadequate and insolvent." Swiss Theologian Karl Barth once remarked, "This world organisation cannot make real peace, but only an approach. The real peace could be made by God alone and not by men." Methodist Minister Ralph Schockman of New York had remarked, "With all its Organisations and its new. Home arising in our city, the U. N. lacks a soul — and this is what religion must give it." World leaders must infuse a Soul into it, if it is to be an effective Agent.

Yet, it is the world's best hope for creating the beginning of a tolerant, civilised, international Community of action. None will deny the need for the continued existence of the U. N. O. even in its present weak state. And no individual is too insignificant or no country too small to contribute its support towads the strengthening of this only Organisation, which is out to promote world peace and the economic development of all countries. Let us all in Jaffna rededicate and renew our pledge of support for the strengthening of the U. N. O. as the best instrument for the maintenance of Peace, fair-play and justice in the world.

---

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philib Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 8th November, 1974.